**கவனிக்க** - 2026.05.15 ஆந் திகதிய 2489 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2490 - 2026 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2026.05.22
2490 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 – B82795 - 5403 (2026/05)

# மாகாண சபை அறிவித்தல்கள்

**நாறம்மல பிரதேச சபை**

## 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான பொது மயானம் மற்றும் தனியார் மயானம் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தில் 5(1) இன் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்

1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் I ஆம் உட் பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட்ட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான பொது மயானங்கள் மற்றும் தனியார் மயானங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாண சபையின் ஆளுநரான திஸ்ஸ குமாரசிரி வர்ணசூரிய ஆகிய என்னால் வடமேல்மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தில் நாரம்மல பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படுகின்ற மயாணம் பிணங்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்காக பொது மயானமாக இத்துடன் பிரகடனப்படுத்துகிறேன்.

திஸ்ஸ குமாரசிரி வர்ணசூரிய,
வடமேல் மாகாண ஆளுநர்,

ஆளுநரது அலுவலகம்,
மாளிகை,
குருணாகல்,
2026 மாச்சு 27.

1946 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்கத்திற்கான பொது மயானம் மற்றும் தனியார் மயானம் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தில் 5(i) பிரிவின் படி வேரகல மயானத்தை அறிவித்தல்.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் தம்பதெனி ஹத்பத்துவையில் உடுகஹ வடக்கு கோரளையில் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 1061 வேரகல கிராம அலுவலர் பிரிவிற்கு இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இறுதி கிராம படிவ இலக்கம் 244 இன் படி, சர்வே ஜனராலின் இலக்கம் KU/NRM/2019/59 மற்றும் மேலதிக இலக்கம் 6 பத்திர இலக்கம் 7 இல் காட்டப்பட்டுள்ள திரு. பி. ஏ. என். குணசிறி நில அளவையாளரினால் அளந்து ஒழுங்கமைக்கப்பட்ட 2021.01.31 ஆந் திகதி சர்வே ஜனரால் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தின் வடக்கிற்கு 13B ஆம் துண்டும், கிழக்கிற்கு 13 , துண்டும் தெற்கிற்கு 154 மற்றும் 153 ஆம் நிலத் துண்டுகளும் மேற்கிற்கு 12 ஆம் நிலத் துண்டுகளும் எல்லையான (ஹெக்டயார் 0.03028) ரூட் 2, பர். 39.7 கொண்ட பெரிய காணி.

05-254

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.